# குருவின் கோலங்கள்..!

-------அது ஒரு காலத்திய
அறிவின் பயணம் ------
ஆண்டு 1982 -ன் பதிவுகள்



## அரசியல் வாதிகள்..!

# வாய்ப்பேச்சு எனும்,
பசுத்தோலைப் போர்த்தி;
உலவிவரும் இந்தப் புலிகள்,
தேர்தல் சமயத்தில்,
பாய்வதற்காகப் பதுங்குகிறார்கள்!

# தேர்தல் நாடகத்தில்,
மக்களைத் தெய்வங்களாக்கி,
மணியடிக்கும் பூசாரிகளாக,
மாறிவிடுகிறார்கள்!

# மணியோசையில், மயங்கிப்போய்,
மக்களும்,
வரம்கொடுத்து விடுகிறார்கள்.!

# தேர்தல் முடிந்ததும், வேடத்தைக்
கலைத்துக் கொள்கிள்கின்றனர்!

# பூக்களோடு சேர்ந்து,
நாரும் மணம் பெறுவதுதான் முறை!

இவர்களிலுள்ள சில பூக்கள்;
இந்த நார்களுடன் சேரும்போது,
உதிரத்தொடங்கி விடுகின்றன!

அதனால்தான் என்னவோ,
இந்த நார்கள் மணம் வீச மறந்து
விடுகின்றன..!

# இவர்களைச் சொல்லி குற்றமில்லை!
இந்தப் பாம்புகளுக்கு,
பால்வார்க்கும் மக்களைப்
பார்க்கத்தான்,
பரிதாபமாயிருக்கிறது....!

— 0 —-

## ஏழைகள்!

# எங்களுடைய சிரிப்பில் ,
இறைவா உன்னைக் காண்கிறேன் என்று,
யாரோ கூறியதைக் கேட்டு,
எங்கே உன்னைத் தொல்லை படுத்துவோமோ;
என எண்ணி, எங்களை என்றும்,
சிரிக்க முடியாத நிலையில்;
வைத்திருக்கிறாயோ? இறைவா!

## காதல்..!

இந்தக் கடலில் மூழ்கி,
முத்தெடுத்தவர்களை விட,
மூச்சடைத்து,
இறந்தவர்கள் தான்,
அதிகம்.!

## புன்னகை..!

இதயம் மீட்டும்,
இனிய கீதங்கள்!
இதழ்கள்,
அலைவரிசையில்
ஒலிபரப்பப்
படுகின்றன!

## காதல்..!

# இந்தக் கரும்பை;
நுனியிலிருந்து,
சுவைக்கத் தெரியாத அப்பாவிகள்;
அடியிலிருந்து சுவைக்கும் போது,
அது அவர்களுக்கு, கசந்து விடுகிறது!

# எனக்கு கரும்பை,
நுனியிலிருந்து,
சுவைக்கத்தான் ஆசை!

# ஆனால் கரும்பே கிடைக்காத போது,
என்ன செய்வது?